# தனித்தேர்வர்களாக மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுத விரும்புவோருக்கான அறிவுரைகள்

## நேரடித் தனித்தேர்வர்களுக்கான தகுதிகள்

அரசாணை (1டி) எண்.573, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள்.03.10.2017–ன் படி, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை தனிப்பட்ட முறையில் நேரடித் தேர்வர்களாக எழுதிட விரும்பும் தேர்வர்கள் கீழ்க்காணும் தகுதிகளை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

i. தமிழக அரசால் நடத்தப்படும் இடைநிலைப் பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

ii. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் தேர்வு நடைபெறும் மாதத்தின் முதல் நாளில் குறைந்த பட்சம் 15 ½ வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

iii. இடைநிலைக் கல்வியில் முழுமையாக தேர்ச்சி பெற்ற பின் ஓராண்டு கால இடைவெளி இருத்தல் வேண்டும். (அதாவது மார்ச் 2019–ல் தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு இணையான தேர்வில், மார்ச்/ஜுன் 2018 அல்லது அதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.)

**iv. மேல்நிலைக் கல்வியில் செய்முறைத் தேர்வு இல்லாத பாடத்தொகுப்பை மட்டுமே தேர்வு செய்து தேர்வெழுத வேண்டும்.**

## தேர்வெழுத தேர்வு செய்யவேண்டிய பாடத்தொகுதிகள் (புதிய பாடத்திட்டம்)

| பகுதி 3 – பாடங்கள் | | | |
|---|---|---|---|
| வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | அறவியல் மற்றும் இந்தியக் கலாச்சாரம் |
| பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் |

..2..

| PART – III Subjects | | | |
|---|---|---|---|
| History | Economics | Commerce | Accountancy |
| Economics | Political Science | Commerce | Accountancy |
| Economics | Commerce | Accountancy | Ethics and Indian Culture |
| Economics | Commerce | Accountancy | Advanced Language (Tamil) |
| Economics | Commerce | Accountancy | Business Maths and Statistics |

<u>பள்ளியில் +1 பயின்று இடைநின்றவர்களுக்கான அறிவுரைகள்</u>

**மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் நேரடித் தனித்தேர்வர்கள் செய்முறைத் தேர்வு இல்லாத பாடத்தொகுப்பை மட்டுமே தேர்வு செய்து எழுத வேண்டும்.**

எனவே, பள்ளியில் மேற்குறிப்பிட்ட பாடத்தொகுதிகளில் ஒன்றில் +1 பயின்று, பள்ளி மாணவராக மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதிய பின்னர், பல்வேறு காரணங்களால், பள்ளிப்படிப்பினை தொடர முடியாத நிலையில் தனித்தேர்வராக மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வினை எழுத விரும்புபவர்கள், **அதே பாடத்தொகுதியில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை தனித்தேர்வராக எழுதிக்கொள்ளலாம்.**

பள்ளியில் **செய்முறைத் தேர்வு உள்ள வேறு பாடத்தொகுப்பில் +1 பயின்று** பள்ளி மாணவராக மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதிய பின்னர், பல்வேறு காரணங்களால், பள்ளிப்படிப்பினை தொடர முடியாத நிலையில் உள்ளவர்கள், **அதே பாடத் தொகுதியிலோ அல்லது வேறு பாடத் தொகுதியிலோ மார்ச் 2019–ல் +2 தேர்வை நேரடித் தனித்தேர்வராக எழுத முடியாது.** அவ்வகையான தேர்வர்கள் மேற்குறிப்பிட்ட செய்முறை தேர்வு இல்லாத பாடத்தொகுதியில் ஒன்றினை தேர்வு செய்து **மீண்டும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை (+1) எழுத வேண்டும்.**

**மேல்நிலைக் கல்வி என்பது மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டை உள்ளடக்கிய ஈராண்டு படிப்பு என்பதால், ஒரு பாடத்தொகுதியில் +1 பயின்று, +1 தேர்வினை எழுதிவிட்டு, வேறொரு பாடத்தொகுதியில் +2 தேர்வினை எழுத இயலாது.**

..3..

**<u>தேர்விற்கு விண்ணப்பித்தல்:–</u>**

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் தேதி குறித்த அறிவிப்பு (Notification) செய்தித்தாட்கள், தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் மூலமும், இவ்வலுவலக வலைத்தளத்திலும் (www.dge.tn.gov.in) அறிவிப்பு வெளியிடப்படும்.

**<u>நேரடித் தனித்தேர்வர்களுக்கு மதிப்பெண்கள் கணக்கிடப்படும் முறை</u>**

அரசாணை (நிலை) எண்.243, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.17.11.2017–ன் படி, பள்ளி மாணாக்கர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் அகமதிப்பீட்டு முறை நேரடித் தனித்தேர்வர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

நேரடித் தனித்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கப்படும்.

மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி அடைய நேரடித் தனித்தேர்வர்கள் அனைத்துப் பாடங்களிலும் எழுத்துத் தேர்வில் 100 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற வேண்டும்.

**<u>மொழிப்பாடம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கு ஒரே தாளாக தேர்வு</u>**

அரசாணை (நிலை) எண்.118, பள்ளிக் கல்வித்(அதே)துறை, நாள்.09.06.2018–ன்படி, மார்ச் 2019 முதல் நடத்தப்படும் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில், மொழிப்பாடம் (Language) மற்றும் ஆங்கிலப் (English) பாடத் தேர்வுகள் ஒரே தாளாக (One Paper) நடத்தப்படும்.

..4..

**<u>பழைய பாடத்திட்டத்தில்  +1 தேர்வெழுதி தோல்வியடைந்த தேர்வர்களுக்கான அறிவுரைகள்</u>**

i. பழைய பாடத்திட்டத்தில் மார்ச் 2018 மற்றும் ஜுன் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்தவர்கள் மட்டும் மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை பழைய பாடத்திட்டத்திலேயே எழுத அனுமதிக்கப்படுவர்.

ii. மார்ச் 2018 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வில் மொழிப்பாடத் தேர்வில் இரண்டு தாள்களாக தேர்வெழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் (பழைய பாடத்திட்டத்தில்) மொழிப்பாடத் தேர்வை ஒரே தாளாக (தாள் I மற்றும் தாள் II யும் இணைத்து ) எழுத வேண்டும். அதே போன்று மார்ச் 2018 ஆங்கிலப் பாடத் தேர்வெழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், மார்ச் 2019–ல் (பழைய பாடத்திட்டத்தில்) ஆங்கிலப்பாடத் தேர்வை ஒரே தாளாக (தாள் I மற்றும் தாள் II யும் இணைத்து ) எழுத வேண்டும்.

iii. அரசாணை (நிலை) எண் 100, பள்ளிக் கல்வி (அ.தே–1)த் துறை நாள் 22.05.2017–ன் படி, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி சில பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஆண்டு விரயமின்றி, அடுத்த ஆண்டு மார்ச் பருவத்தில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதலாம். தோல்வியுற்ற பாடத்தை / பாடங்களை ஜுன் / ஜுலை மாதத்தில் நடைபெறும் உடனடி சிறப்புத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு இறுதித் தேர்வின் போதோ அல்லது இரண்டிலுமோ பின்னடைவுப் பாடமாக (arrear) கல்லூரிகளில் உள்ளது போன்ற நடைமுறையில் தேர்வு எழுதிக் கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, மார்ச் 2018–ல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், மார்ச் 2019–ல் நடைபெறும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் (பழைய பாடத்திட்டத்தில்) தோல்வியடைந்த பாடங்களையும், மார்ச் 2019–ல் நடைபெறும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினையும் சேர்த்து எழுத அனுமதிக்கப்படுவர்.

**<u>மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் முறை</u>**

அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.14.09.2018–ன்படி,

i. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் போது, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் என பதிவு செய்து தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) வழங்கப்படும்.

ii. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத தேர்வர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிழ்கள் வழங்கும் சமயம், முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து மதிப்பெண் பட்டியல்கள் (Mark Statements) மட்டும் வழங்கப்படும். அவ்வகையான தேர்வர்களுக்கு அவ்விரு தேர்வுகளிலும் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து மதிப்பெண் பட்டியல்கள் (Mark Statements) மட்டுமே வழங்கப்படும்.

ஒம்/–

**இயக்குநர்**